**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 589/2024**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : மாரியப்பன்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (19.07.2025)

Accused present

<u>குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்கிறேன். 2-½ ஏக்கர் நிலம் வைத்துள்ளேன். தற்போது நெல்பயிர் விவசாயம் எடுத்துள்ளேன். எனது வங்கி கணக்கில் ரூ.5000/-ம் உள்ளது. வங்கியில் வரவு செலவு எவ்வளவு நாட்களாக வைத்துள்ளேன் என்றால் 10 வருடமாக வைத்துள்ளேன். எனது வங்கி கணக்கில் நிறைய தொகை எவ்வளவு நாட்களுக்கு முன்பு உள்ளது என்றால் 2022 லிருந்து மூன்று வருடமாக ரூபாய் 12 லட்சத்திற்கு மேல் பரிவர்த்தனை செய்து வருகிறேன். நான் வருமான வரி எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் பெயரில் வருமான வரி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அவர் உயிருடன் இருக்கும் போது இந்த 2-½ ஏக்கர் நிலத்தில் தான் விவசாயம் செய்து வந்தோம் என்றால் இல்லை. அவருக்கு தனியாக இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. முதல் விசாரணையில் எதிரி எனது வீட்டிற்கு 2023 ஆம் வருடம் ஜூன் மாதம் வந்து என்னிடம் மூன்று லட்சம் பணம் கேட்டதாக சொல்லியுள்ளதில் தேதி, மாதம், ஞாபகம் உள்ளதா என்றால் 28.05.2023 ஆம் தேதி, 28.10.2023. நான் முதல் விசாரணையில் 25 லட்ச ரூபாய் பல்கிலிருந்து சேர் வருவதாகவும் அதில் லாபத்தில் பங்கு கொடுப்பதாகவும் பேசியதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது, விஷயமாக ஏதேனும் எழுத்துப்பூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை.

நான் சிறுக சிறுக சேமித்து வைத்திருந்ததாக சொல்லி உள்ளது, அதற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள காசோலையில் (ம.சா.ஆ.4) பெயர், மற்ற விவரங்களை யார் எழுதினார்கள் என்றால் எல்லாமே அவர்கள் தான் எழுதினார்கள். எங்கு வைத்து என்றால் பல்கில் வைத்து எழுதினார்கள். சாட்சி முதலில் பல்கில் வைத்து எழுதியதாக கூறிவிட்டு தற்போது வீட்டில் வந்து எழுதி கொடுத்ததாக கூறுகிறார். காசோலையில் கையொப்பம் போடும்போது நான் பார்த்தேன் என்றால் பார்த்தேன். அதிலுள்ள கையெழுத்து அவர்களது இல்லை என சொல்கிறார்கள் என்றால் இல்லை, அவர்கள் தான் பூர்த்தி செய்தார்கள். நான் வழக்கறி மூலமாக அறிவிப்பு அனுப்பியதாக சொல்லி எதிரி தமிழ் கிடையாது, மலையாளி என்றால் சரிதான். ஆனால் தமிழ் தெரியும். எதிரி எனக்கு தமிழ் தெரியாது, அதனால் அறிவிப்பை ஆங்கிலத்தில் அனுப்புமாறு எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியும், வக்கீல் சார் ஆங்கிலத்தில் தான் அனுப்பினார். ஆங்கிலத்தில் அனுப்பியதாக சொல்லப்படும் அறிவிப்பு, அதைப் பெற்றுக் கொண்டதற்கான எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருந்தபோதிலும் எதிரி ஆங்கிலத்தில் அவரது வழக்கறிஞர் மூலமாக எனக்கு பதில் அளித்து எழுதியிருந்தார் என்றால் சரிதான்.

25 லட்ச ரூபாய்க்கு கொடுத்த காசோலை சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக நான் எதிரி மீது புகார் கொடுத்து புளியரை காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். என் மீது SP-யிடம் புகார் கொடுத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து பணம் ஏதும் வாங்கினேன் என்றால் மூன்று லட்ச ரூபாய் வாங்கினேன். காவல் நிலையத்தில் வைத்து வாங்கிய மூன்று லட்ச ரூபாய் போக வேறு எங்கு வைத்தும் பணம் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி பதிலறிப்பில் சொன்ன விவரங்களை மறுத்து நான் எந்த விதமான விளக்கங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பணம்

கேட்டதாக சொல்லியுள்ளது யார் முன்னிலையில், எங்கு வைத்து, எந்த தேதியில் பேசினோம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

எனது அண்ணனுக்கும், எதிரிக்கும் இடையே நடந்த கான்ட்ராக்டின் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எனக்கு தெரியாமல் எனது அண்ணன் எதிரியிடம் தனியாக பணம் ஏதும் வாங்கினாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வாங்கவில்லை, வாங்கி இருந்தால் என்னிடம் சொல்லி இருப்பார். எதிரிக்கும், எனது அண்ணனுக்கும் இருந்த பணப்பரிவர்த்தனை சம்பந்தமாக பணம் கொடுக்கப்பட்டு முடிக்கப்பட்ட பின்பு எனது அண்ணனிடம் கொடுக்கப்பட்ட காசோலை வைத்து பொய்யாக இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் உள்ள காசோலை எதிரியால் கொடுக்கப்படவில்லை, அதில் உள்ள வாசகங்கள் எதிரியால் எழுதி கொடுக்கப்படவில்லை என்றாலும் சரி இல்லை. வாசகங்களில் உள்ள கையொப்பமும், அதில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களும் வேறு வேறு மையில் உள்ளது என்றால் சரிதான், அவர்கள் தான் எழுதினார்கள். நானும், எனது அண்ணனும் எதிரிக்கு 25 லட்ச ரூபாய் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் கிடையாது என்றால் சரியல்ல. நகையை அடமானம் வைத்து, லோன் போட்டு தான் கொடுத்தேன். என்னிடம் 25 லட்ச ரூபாய் வாங்குவதற்கு எதிரிக்கு எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.07.19 15:40:06 +05'30'

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai